அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 362

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
12 மார்ச்சு, 1987.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## அரசாங்க நிருவாக அமைச்சுக்கு அனுப்ப வேண்டிய விடயங்கள்.

தாபனப் பிரிவின் தொழிற்பாட்டெல்லைக்குள் முறையாக வராத தாபனப் பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு விடயங்களை அமைச்சுக்கள்/அரசாங்கத் திணைக்களங்கள் தொடர்ந்தும் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பிய வண்ணம் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன்/திணைக்களங்களுடன் முறையாகத் தொட கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகத் தொழிற்சங்கங்கள்/தனிப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட தாபனப் பணிப்பாளருக்கும் இந்த அமைச்சுக்கும் தங்கள் முறைப்பாடுகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

02. இந்த அமைச்சிற்கு அல்லது தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பப்படுபவையும் அவ்வாறு அனுப்பத்தகாதவையுமான சில விடயங்கள் வருமாறு.

(அ) சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின்/திணைக்களத் தலைவரின் தொழிற்பாட்டெல்லைக்குள் திட்டவட்டமாக அடங்கும் விடயம் சம்பந்தப்பட்ட வரையில் மதியுரைக்காகவோ, அவதானிப்புகளுக்காகவோ பணிப்புரைகளுக்காகவோ அனுப்பப்படும் விடயங்கள் குறித்த விடயத்தைக் கவனமாக ஆராயாத/பொருத்தமான விதிகளையோ ஒழுங்கு விதிகளையோ பற்றிய பரிச்சயமில்லாத/சரியான அதிகாரி அது பற்றிய சரியான முடிபினை மேற்கொள்வதற்காகக் குறித்த விடயம் பற்றி முறையாக ஆராயும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர்கள் அவ்விடயங்களை அடிக்கடி இப்பகுதிக்கு அனுப்புகின்றனர்.

(ஆ) சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களம் கொள்கை முடிபுகளை எடுக்க வேண்டிய விடயங்கள் அல்லது அமைச்சரவை ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய விடயங்கள்.

(இ) செயலாளர்/இணைச்செயலாளர்/திணைக்களத் தலைவர் மட்டத்திலும் கீழ் மட்டமொன்றில் இந்த அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டுமென தீர்மானமெடுக்கப்பட்ட விடயங்கள்.

03. தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டிய விடயங்கள் பேரளவில் பின்வரும் வகுதிகளுக்குள் அடங்கும்.

(அ) தாபனப் பணிப்பாளரின்/இவ்வமைச்சின் குறித்த அங்கீகாரம் அல்லது அதிகாரம் பெறப்பட வேண்டிய விடயங்கள் அத்தகைய அங்கீகாரம் அல்லது அதிகாரம் பெறப்பட வேண்டிய விடயங்களைத் தாபனக் கோவையும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளும் தாபனச் சுற்று நிருபங்களும் குறித்துரைக்கின்றன.

(ஆ) இந்த அமைச்சினால் வெளியிடப்பட்ட தாபனக் கோவை அல்லது சுற்றறிக்கைகள் அல்லது சுற்று நிருபங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளின் வியாக்கியானம் பற்றிய விடயங்கள்.

(இ) நடைமுறை பற்றி அல்லது அறிவுறுத்தல்கள் பற்றி சந்தேகம் காணப்படுமிடங்கள் அல்லது அது பற்றித் தாபனக் கோவை/சுற்றறிக்கைகள் கூறாதுவிட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தாபனப் பணிப்பாளருடன்/இவ்வமைச்சுடன் மேற்கொண்டு உசாவாமல் முடிவொன்றினை மேற்கொள்வது செயலாளருக்கு/இணைச் செயலாளருக்கு/திணைக்களத் தலைவருக்கு இடர்பாடானதாகவுள்ள விடயங்கள்.

04. இந்த விடயங்கள் மட்டுமே தாபனப் பணிப்பாளருக்கு/இந்த அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும் எனபதையும் அவ்வாறு அத்தகைய விடயங்கள் அனுப்பப்பட வேண்டுமென செயலாளர்/இணைச்செயலாளர்/திணைக்களத் தலைவர் திருப்திப்படும் விடயங்களை அனுப்ப வேண்டும் என்பதையும் உங்கள் பணியாளர்களுக்கு அறிவுறுத்துதல் நன்று. அத்தகைய கடிதம் எதுவாயிருப்பினும் அதில் செயலாளர்/இணைசெயலாளர்/திணைக்களத் தலைவர் ஒப்பமிடுதல் /மேலொப்பமிடுதல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.